



# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

## பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலன்

### மானியக் கோரிக்கை எண். 9

## அறிவிப்புகள்
## 2024- 2025

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

# பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலன்

மானியக் கோரிக்கை எண். 9

அறிவிப்புகள்
2024- 2025

ஆர்.எஸ். ராஜகண்ணப்பன்
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்

## 1) திரவ பெட்ரோலிய வாயு (L P G) மூலம் இயங்கும் தேய்ப்பு பெட்டிகள் 73 இலட்சம் ரூபாய் செலவில் வழங்குதல்.

பொருளாதாரத்தில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த சலவைத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றவர்களுக்கு மாறிவரும் காலச் சூழலுக்கேற்ப, புதிய முன்னெடுப்பாக தற்போது வழங்கப்பட்டு வரும் பித்தளை தேய்ப்பு பெட்டிகளுக்கு பதிலாக திரவ பெட்ரோலிய வாயு (LPG) மூலம் இயங்கும் தேய்ப்பு பெட்டிகள் 1200 பயனாளிகளுக்கு வழங்கப்படும்.

இத்திட்டத்திற்கு வரவு செலவு மதிப்பீட்டில் 73 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2) 693 விடுதிகளுக்கு DTH இணைப்புகளுடன் LED தொலைக்காட்சி பெட்டிகள் 2 கோடியே 93 இலட்சத்து 83 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்குதல்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் செயல்பட்டுவரும் 1351 விடுதிகளில் 658 விடுதிகளுக்கு DTH இணைப்புடன் LED தொலைக்காட்சி வசதிகள் ஏற்கனவே வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

இந்த ஆண்டு இதுவரை இவ்வசதி வழங்கப்படாமல் உள்ள 693 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளுக்கு DTH இணைப்புகளுடன் LED தொலைக்காட்சி பெட்டிகள் 2 கோடியே 93 இலட்சத்து 83 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.



## 3) சீர்மரபினர் நல வாரியம் மூலம் வழங்கப்படும் உதவித்திட்டங்களை இணைய வழி சேவைகள் மூலம் ஒருங்கிணைத்து செயலாக்கம் (Online operations)

சீர்மரபினர் நல வாரியத்தில் புதிய உறுப்பினர்கள் பதிவு செய்தல், ஏற்கனவே பதிவு பெற்ற உறுப்பினர்கள் அவர்களது விவரங்களை புதுப்பித்தல், பதிவு செய்த உறுப்பினர்கள் நிவாரணத் தொகை கோரி விண்ணப்பம் செய்தல், அவர்களுக்கு உதவித் தொகைகளை துரித காலத்தில் வழங்குதல் ஆகிய பணிகளை ஒருங்கிணைத்து எளிமைப்படுத்தும் வகையில் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலம் இணைய வழி சேவைகள் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும். இதற்கு தேவைப்படும் நிதி 15 இலட்சம் ரூபாய் வாரிய நிதியிலிருந்து செலவிடப்படும்.

## 4) சென்னை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய பெரு நகரங்களில் உள்ள விடுதிகளுக்கு ஒருங்கிணைந்த பொது சமையலறை (Common Kitchen) 2 கோடியே 69 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்துதல்.

சென்னை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய பெரு நகரங்களில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு தரமான உணவு வழங்குவதற்காக, தலா ஒரு ஒருங்கிணைந்த பொது சமையலறை 2 கோடியே 69 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.



## 5) விடுதிகளில் "விடுதிகள் மேலாண்மை தகவல் அமைப்பு" HMIS (Hostel Management Information System) 10 கோடியே 59 இலட்சத்து 43 ஆயிரம் ரூபாய் செலவில் செயல்படுத்துதல்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் முக அங்கீகார செயலி நிறுவுதல் (Face Authentication App), கண்காணிப்பு கேமராக்கள் (CCTV Camera) பொருத்துதல் மூலம், "விடுதிகள் மேலாண்மை தகவல் அமைப்பு" HMIS (Hostel Management Information System) ஆகியவை 10 கோடியே 59 இலட்சத்து 43 ஆயிரம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

## 6) 290 கல்லூரி விடுதிகளின் சமையலறை பயன்பாட்டிற்காக புதிய பாத்திரங்கள் 1 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் வழங்குதல்.

290 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல கல்லூரி விடுதிகளின் சமையலறை பயன்பாட்டிற்காக புதிய பாத்திரங்கள் 1 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.



## 7) 692 பள்ளி விடுதிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் 1 கோடியே 38 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்குதல்.

692 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல பள்ளி விடுதிகளில் பயிலும் மாணவர்களின் பயன்பாட்டிற்காக விளையாட்டு உபகரணங்கள் 1 கோடியே 38 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

**8) ஈரோடு, தூத்துக்குடி, கடலூர், கோயம்புத்தூர் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் தலா ஒரு விடுதியென ஐந்து புதிய கல்லூரி மாணவியர் விடுதிகள் 2 கோடியே 83 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் செலவில் துவங்குதல்.**

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவியரின் நலன் கருதி 500 மாணவியர் பயன்பெறும் வகையில் பின்வரும் இடங்களில் 5 புதிய கல்லூரி விடுதிகள் 2 கோடியே 83 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் செலவில் துவங்கப்படும்.

1)பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, அந்தியூர், ஈரோடு.

2)பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, கோவில்பட்டி, தூத்துக்குடி.

3)மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, திட்டக்குடி, கடலூர்.

4)பிற்படுத்தப்பட்டோர் நல தொழில்நுட்ப கல்லூரி மாணவியர் விடுதி, கவுண்டம்பாளையம், கோயம்புத்தூர்.

5)பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, சிவகாசி, விருதுநகர்.



**9) 19 பள்ளி விடுதிகளை 1 கோடியே 96 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாய் செலவில் கல்லூரி விடுதிகளாக நிலை உயர்த்துதல்.**

கல்லூரி விடுதிகளின் தேவையை கருத்தில் கொண்டு, 1400 மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் 19 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல பள்ளி விடுதிகள் 1 கோடியே 96 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாய் செலவில் கல்லூரி விடுதிகளாக நிலை உயர்த்தப்படும்.

## 10) 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ/ மாணவியர் நலன் கருதி NEET, JEE நுழைவுத் தேர்விற்கான வினா விடை வங்கி நூல்கள் 22 இலட்சத்து 22 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்குதல்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல பள்ளி விடுதிகளில் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ/மாணவியர்கள் எதிர்வரும் காலங்களில் NEET, JEE போன்ற நுழைவுத் தேர்வுகளில் தேர்ச்சி பெற ஏதுவாக வினா–விடை வங்கி நூல்கள் 22 இலட்சத்து 22 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.



## 11) வாடகை கட்டிடங்களில் இயங்கும் 3 கல்லூரி விடுதிகளுக்கு நபார்டு வங்கி நிதி உதவியுடன் 50 கோடி ரூபாய் செலவில் சொந்த கட்டடங்கள் கட்டுதல்.

விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் நலன் கருதி வாடகை கட்டிடங்களில் இயங்கும் பின்வரும் 3 பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி விடுதிகளுக்கு 50 கோடி ரூபாய் செலவில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் சொந்த கட்டடங்கள், கட்டப்படும். இதன் மூலம் 520 மாணவ, மாணவியர் பயன் பெறுவர்.

1.பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, இராணிமேரி கல்லூரி வளாகம், சென்னை.

2.பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, சாத்தமங்கலம், மதுரை.

3.மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, பென்னாகரம், தருமபுரி.

## 12) பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளுக்கு சிறப்பு பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் 10 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளுதல்.

விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் நலன் கருதி, சொந்த கட்டிடங்களில் இயங்கி வரும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளுக்கு சிறப்பு பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் 10 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.



## 13) 36 மாணவியர் விடுதிகளுக்கு 3 கோடியே 85 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் செலவில் சுற்றுச்சுவர் கட்டுதல்.

விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவியரின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு 36 பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதிகளுக்கு 3 கோடியே 85 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் செலவில் சுற்றுச்சுவர் கட்டவும், மேலும் கிராமப்புறங்களில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிகளுக்கு தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் (NREGA) கீழ் சுற்றுச்சுவர் கட்டவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**14) கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் சிறப்பு பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் 3 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளுதல்.**

மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டகளில் செயல்படும் கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரின் நலன் கருதி, அப்பள்ளிகளுக்கு 3 கோடி ரூபாய் செலவில் சிறப்பு பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.



**15) சீர்மரபினர் நல வாரிய உறுப்பினர்களின் குடும்பத்திற்கு வழங்கப்படும் இயற்கை மரண உதவித் தொகை 20 ஆயிரம் ரூபாயிலிருந்து 30 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியும் மற்றும் விபத்தினால் ஏற்படும் மரணத்திற்கு வழங்கப்படும் உதவித் தொகை 1 இலட்சத்திலிருந்து 1 இலட்சத்தி 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியும் வழங்குதல்.**

சீர்மரபினர் நல வாரிய உறுப்பினர்களின் குடும்பத்திற்கு இயற்கை மரணத்திற்கு வழங்கப்படும் உதவித் தொகை 20 ஆயிரம் ரூபாயிலிருந்து 30 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியும் மற்றும் விபத்தினால் ஏற்படும் மரணத்திற்கு வழங்கப்படும் உதவித் தொகை 1 இலட்சத்திலிருந்து 1 இலட்சத்தி 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியும் வழங்கப்படும்.

## 16) சீர்மரபினர் நல வாரிய உறுப்பினர்களுக்கான முதியோர் ஒய்வூதிய உதவித் தொகை 1,000 ரூபாயிலிருந்து 1,200 ரூபாயாக உயர்த்தி வழங்குதல்.

சீர்மரபினர் நல வாரிய உறுப்பினர்களுக்கான முதியோர் ஒய்வூதிய உதவித் தொகையை 1,000 ரூபாயிலிருந்து 1,200 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

**ஆர்.எஸ். ராஜகண்ணப்பன்**
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்